NFTE BSNL

TamilNadu Circle

## BSNL ஊரக இணைப்புகளுக்கான USOF மான்யம் மறுப்பா?

வருகிற ஜூலை 2011 உடன் ஊரக தரைவழி இணைப்புகளுக்கான USOF உதவி முடிவிற்கு வருகிறது. அதை ஆண்டுதோறும் தொடரவேண்டும் என்ற கோரிக்கையை BSNL நிர்வாகம் வைத்துள்ளது. ஊரக இணைப்புகளுக்கான பற்றாக்குறை ரூ9306 கோடி என்று BSNL கணக்கிட்டு DOTக்கு அனுப்பியது.

BSNLக்கு நிதி உதவியை அரசாங்கம் எவ்வாறு செய்வது என்பதை பரிசீலிக்க 3-3-11 அன்று தொலைத்தொடர்பு செயலர் தலைமையிலான கூட்டம் நடந்தது. அக்கூட்டத்திலும் BSNL பற்றாக்குறை கோரிக்கை பரிசீலனைக்கு வந்தது. இதைத் தொடர்ந்து BSNL ன்CMD ஆல் 8-5-11 அன்று எழுதப்பட்ட கடிதம் USOF நிர்வாகத்திற்கும் அனுப்பப்பட்டது. இதற்கான எதிர்வினையை USOFன் DOTன் மெம்பர் சர்வீஸ்ற்கு குறிப்பாக அனுப்பியுள்ளது. அக்குறிப்பில் BSNL கோரும் நிதி உதவியை எவ்வாறெல்லாம் தரவே முடியாது என்பதற்குரிய ஆதாரங்களை மட்டுமே USOF நிர்வாகம் அடுக்கியுள்ளது. USOF நிர்வாகம் முன் வைக்கும் வாதங்களை ஊழியர் அறிய தந்துள்ளோம்.

- மார்ச் 2011வரை பல்வேறு வகைகளில் USOF நிதி உதவி 9139.08 கோடி கொடுத்திருந்தும் ஊரக தரைவழி இணைப்புகள் குறைவதை BSNLஆல் த்டுக்க முடியவில்லை. கிராமப்புற மக்கள் BSNL சேவையின் தரம் குறித்து அதிருப்தி அடைந்துள்ளதையே இது காட்டுகிறது.
- TRAI மார்ச் 2002 அன்றிருந்த 90 லட்சம் இணப்புகளுக்கு கணக்கிட்டு ஆண்டிற்கு 2000 கோடி மான்யம் என்றது.(ADC ஒழிக்கப்பட்டபோது தரப்பட்ட ஆறுதல்- மா.செ). ஆனால் 11.68 லட்சம் இணைப்புகள் குறைவு என 300 கோடி மட்டுமே வெட்டு என்றது TRAI. ஏப்ரல் 2008 முதல் மார்ச் 2011 காலத்தில் 29.7 லட்சம் இணைப்புகள் குறைந்துள்ளன.
- BB இணைப்புகள் குறைவதை த்டுக்க வழி காணவேண்டும். ஊரக பகுதியில் 2.68 லட்சம் இணைப்புகளை BSNL தந்துள்ளது. வருவாய்

பெருகிட Unbundling தான் வழி. தனியார் நிறுவனங்களுடன் பகிர்வது மூலம் வருவாய் பெருகும்

- ஊழியர் சம்பளம் உட்பட actual expenditure என்ற பெயரில் cost கணக்கிடுவது வருவாய் பெருக்கத்திற்கு உதவப் போவதில்லை.
- கிராமப்புற இணைப்புகளில் 15 சதம் மட்டுமே வைத்துள்ள BSNL மான்யமாக USOFல் 85 சதம் பெற்றுள்ளது. 2010-11 காலத்தில் 22.8 சதம் இணைப்பு கொடுத்து 96.83 சதம் மான்யம் பெற்றுள்ளது.
- மேற்கூறிய காரணங்களால், ஊரக சேவையை BSNL மேம்படுத்தாமல் அந்நிறுவனத்திற்கு உதவுவது என்பதை DOT மறு பரிசீலைனை செய்திட வேண்டும். Unbundling தான் வழி எனில் அதை பரிசீலிக்க வேண்டும்.

. BSNL கோரிய 9306 கோடி பற்றாக்குறையை ஆதாரபூர்வமாக USOF நிர்வாகம் நிராகரித்ததுபோல் வெளித்தெரியும். ஆனால் அப்பட்டமான பொதுத்துறை எதிர்ப்பும் தனியார் ஆதரவும்தான் உள்ளீடாக செயல்பட்டுள்ளது.

Unbundling போன்ற பாலிசி விஷயங்களில் மூக்கை நுழைக்க USOF நிர்வாகத்திற்கு என்ன அதிகாரம்? தனியார் பாசம் தவிர தேச நல விருப்பம் என சொல்ல முடியுமா? பெரும் முதலாளிகளின் தனியார் நிறுவனங்களுக்கு USOF மான்யம் என்பதே தவறு. அவர்கள் அடக்கசெலவை உண்மையாக காட்டித்தான் முறையான உரிய மான்யத்தை பெறுகிறார்களா என்பது வெளிக் கொணரப்பட வேண்டும்..

தொழிற்சங்க இயக்கங்களின் தலைமைகள் USOF அம்சத்தில் கவனம் சற்று செலுத்தி BSNL கோரிய 9300 கோடியை பெற்றிட முன்முயற்சி எடுத்திட வேண்டும்.

13-6-11